இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் 2017 / 2018

**ESC 1135/ EPC1335** ஆக்கத்திறன், அழகியல் கல்வி மற்றும் கையாளும் திறன்களின் விருத்தி

காலம் : 2 மணித்தியாலங்கள்

---

திகதி : 23.04.2019 நேரம் பி.ப 02.00 – பி.ப 04.00

---

பகுதி I இல் அனைத்து வினாக்களிற்கும் பகுதி II இல் ஏதேனும் 3 வினாக்களிற்கும் விடை தருக.

## பகுதி I

1. முன்பள்ளிப் பிள்ளைகளிடத்தில் கையாளும் திறன்களின் நோக்கம் நான்கினைக் (04) குறிப்பிடுக?

2. முன்பள்ளிப் பிள்ளைகளிடத்தில் நுண்இயக்கத்திறன்களை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள் நான்கினைக் (04) குறிப்பிடுக?

3. இளம்பிள்ளைகளிடத்தில் இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய ஆக்கச் செயற்பாடுகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக?

4. செயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி இளம்பிள்ளைகளிடத்தில் உருவாக்கக்கூடிய ஆக்கச் செயற்பாடுகள்கள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக?

5. இளம்பிள்ளைகளிடத்தில் கலை மற்றும் ஆக்கத்திறன்களை ஊக்கப்பபடுத்துவதற்கான செயற்பாடுகள் நான்கினைக் (04) குறிப்பிடுக?

6. சிறுவர் நாடகங்களில் முகமூடிகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக?

7. முன்பள்ளிப் பிள்ளைகளிடத்தில் பேரியக்கத்திறன்களை விருத்தி செய்வதற்கான பொருத்தமான செயற்பாடுகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக?

8. முன்பள்ளி ஆசிரியர் தமது செயற்பாடுகளைத் திட்டமிடும் போது முன்பள்ளிப் பிள்ளைகளது பேரியக்கத்திறன் விருத்தியில் கவனம் செலுத்த வேண்டிய விடங்களை சுருக்கமாக விளக்குக?

(8x5=40 புள்ளிகள்)

## பகுதி II

9. i) முன்பள்ளிப் பிள்ளைகளின் இசையும் அசைவும் உடல், சமூக மற்றும் மனவெழுச்சி விருத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii) முன்பள்ளிப் பிள்ளைகளுடைய முழுமையான விருத்திக்கு சிறுவர் நாடகம் எத்தகைய தாக்கத்தை செலுத்துகின்றதென்பதை உதாரணங்களுடன் ஆய்வு செய்க.

(12 புள்ளிகள்)

10. i) அழகியல் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு உபயோகிக்கக்கூடிய உபகரணங்கள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக.

(08 புள்ளிகள்)

ii) முன்பள்ளிப் பிள்ளைகளின் அழகியல் செயற்பாடுகளை முன்பள்ளி ஆசிரியர் திட்டமிடும் போது கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு (04) செயற்பாடுகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

11. i) முன்பள்ளிப் பிள்ளைகளிடத்தில் சித்திரத்திறன்களை விருத்தி செய்வதற்கு முன்பள்ளி ஆசிரியர் செயற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் நான்கினைக் (04) குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii) சிறுவர் சித்திரங்களை முன்பள்ளி ஆசிரியர் மதிப்பிடும் போது கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினை (04) உதாரணங்களுடன் விபரிக்குக.

(12 புள்ளிகள்)

12. i) சிறுவர் சித்திரத்துடன் தொடர்புடைய படிமுறைகள் ஒவ்வொன்றினதும் குறிப்பான இயல்புகளை பகுப்பாய்வு செய்க.

(08 புள்ளிகள்)

ii) "சிறுவர் சித்திரமானது மனவெழுச்சிகளை நிகழ்த்திக்காட்டக்கூடிய நிலையமாகக் காணப்படுகின்றது." இதனை ஏற்றுக்கொள்கிறீரா? நீர் குறிப்பிட்ட விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(12 புள்ளிகள்)

13. i) முன்பள்ளிப் பிள்ளைகளின் கற்றல் சூழலை உருவாக்குவதற்கு ஆசிரியர் ஒழுங்குபடுத்தக்கூடிய செயற்பாடுகள் நான்கினைப் (04) பரிந்துரை செய்க.

(08 புள்ளிகள்)

ii) கற்றல் சூழலை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் போது ஆசிரியர் முகங்கொடுக்கக்கூடிய பிரச்சினைகள் மூன்றினைக் (03) குறிப்பிடுக?

(03 புள்ளிகள்)

iii) நீர் மேற்குறிப்பிடும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தீர்வுகளை விளக்குக?

(09 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*